மலர் 2 இதழ் 1 ஜூலை, 2017 ISSN : 2454-3993

# பிரபஞ்சனின் "அப்பாவின் வேஷ்டி" சிறுகதைத் தொகுதியில் "அப்பா" கதாபாத்திரம்

சு.சத்யா
நிறைஞர்பட்ட ஆய்வாளர்
காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம்
காந்திகிராமம்

**முன்னுரை**

ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பது தாய் என்றால், தாயின் கருவிற்கு உயிர் கொடுப்பவர் தந்தை ஆவார். "தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனால்" என்று தொல்காப்பியக் கற்பியல் உரைவிளக்கத்தில் கூறப்பட்டுள்ளது. தந்தை என்பவர் குடும்பத்தின் ஆணிவேர், சுமைதாங்கி, நல்ல நண்பன், நல் ஆயான் என்று எவ்வளவோ பொறுப்புக்களைச் சுமக்கிறார். இப்படிப் போற்றத்தக்க தந்தையைப் பிரபஞ்சன் தம் "அப்பாவின் வேஷ்டி" சிறுகதைத் தொகுதியில் பல கோணங்களில் சித்திரித்துள்ளார். இலக்கியத்தில் தந்தை, பிரபஞ்சனின் பார்வையில் தந்தை, தந்தையின் தோற்றம், பண்புகள், செயல்கள், எதிர்மறைக் கதாபாத்திரம், அப்பா பாத்திரத்தில் தன் வரலாற்றுக் கூறுகள் ஆகியவை இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளன.

**இலக்கியத்தில் தந்தை**

இந்தியக் குடும்பச் சூழலில் தந்தையே குடும்பத்தின் தலைவராகவும், அவரே அத்தனை பொறுப்புகளைக் சுமப்பவராகவும், தனது கடமையைச் செய்பவராகவும் இருப்பார்.

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்" (குறள் 67)

என்று தந்தை தம் மகனைக் கல்வி, கேள்விகளில் ஓங்கச்செய்து, கற்றோர் அவையில் முந்தி முதன்மைபெற்று இருக்கச் செய்தல் எனும் தந்தையின் கடமையைக் கூறுகிறார் வள்ளுவர்.

"தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது" (குறள் 68)

என்னும் மற்றொரு குறள், தந்தை தம் மக்களைத் தனக்குமேல் கல்வி, அறிவுத்தகுதி உடையவர்களாக்க வேண்டும் என வலியுறுத்துகிறது. "சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே" எனப் புறநானூற்றில் 'பொன்முடியார்' கூறுகிறார். இவ்விலக்கியச் சான்றுகள் தந்தையின் கடமையை உணர்த்துகின்றன.

**தந்தை கதாபாத்திரம்**

பிரபஞ்சன் தனது "அப்பாவின் வேஷ்டி" சிறுகதைத் தொகுதியில் உள்ள இருபத்தைந்து கதைகளுள் இருபது கதைகளில் தந்தையைப் பற்றிக் கூறியுள்ளார். ஏழு கதைகளில் தன் சொந்தத் தந்தையைப் பற்றியும், ஆறு கதைகளில் தந்தையை முதன்மைப் பாத்திரமாகவும், எட்டுக் கதைகளில் துணைமைப் பாத்திரமாகவும் சித்திரித்துள்ளார்.

**முதன்மைப் பாத்திரம்**

"அப்பாவுக் கணக்கில் 35 ரூபாய்" என்ற கதையில் வரும் 'அப்பாவு' பற்றியே கதைக்களம் அமைந்துள்ளது. அவரது நடத்தை, செய்கைகள், குடும்பச் சூழல் பற்றிக் கூறப்படுவதால் 'அப்பாவு' முதன்மைப் பாத்திரமாகச் சித்திரிக்கப்படுகிறார். "நிகழ் உலகம்" என்கிற கதையில் வரும் மூர்த்தி, சிறையிலிருந்து வெளிவருதல், அவனது தற்போதைய சூழல் ஆகியவை பற்றிக் கூறுவதால் மூர்த்தியே முதன்மைப் பாத்திரமாகச் சித்திரிக்கப்படுகிறான். "மாறுதல்கள்" கதையில் வரும் கோபியின் தந்தை பட்டணத்திலிருந்து வருதல், தன் மகனைப் பற்றிய பழைய நினைவுகள், தன் தந்தை தன்னிடம் நடந்து கொண்ட விதம் தற்பொழுது வளர்ந்துவிட்ட கோபியிடம் ஏற்பட்டுள்ள மாற்றம் இவற்றைக் கூறுவதால் கோபியின் தந்தையே இதில் முதன்மைப் பாத்திரமாகக் காட்டப்படுகிறார். "ஓடிப்போனவள் திரும்பியபோது" என்ற கதையில் வரும் பரசுராமனின் இயல்புகள், தோற்றம், குடும்பச்சூழல் பற்றிக் கூறுவதால் 'பரசுராமன்' முதன்மைப் பாத்திரமாகிறார். 'நேற்று மனிதர்கள்' கதையில் வரும் சுமதியின் தந்தையின் இயல்புகள், வைராக்கியம் இவை பற்றிக் கூறுவதால் அவரே முதன்மைப் பாத்திரமாகிறார். 'அப்பாவின் வேஷ்டி' கதையில் வரும் அப்பா விசேஷ நாட்களில் தனது பட்டு வேஷ்டியை உடுத்துதல், அதைப் பராமரித்தல் பற்றிக் கூறப்படுவதால் அவரே முதன்மைப் பாத்திரமாகிறார்.

**துணைமைப் பாத்திரம்**

"3 நாள்" என்ற கதையில் சுமதியின் கஷ்டங்கள் பற்றிக் கூறப்படுகிறது. இடையில் சுமதியின் தந்தை படும் மனவேதனை பற்றிக் கூறப்படுகிறது. இக்கதையில் சுமதியின் தந்தை துணைமைப் பாத்திரமாகிறார். 'வடு' என்கிற கதையில் மூர்த்தி, செண்பக ராஜலட்சுமியின் கல்லூரி வாழ்க்கை பற்றிக் கூறப்பட்டுள்ளது. செண்பகா தன் தந்தை பற்றிக் கூறுகிறார். எனவே அவளின் தந்தை துணைமைப் பாத்திரமாகச் சித்திரிக்கப்படுகிறார். "சுமதிக்கு ஒரு கடிதம்" என்ற கதையில் மூர்த்தி, சுமதி ஆகியோரின் வாழ்க்கை நிகழ்வுகள் கூறப்பட்டுள்ளன. இதில் கஸ்தூரியின் தந்தை பரசுராம் துணைமைப் பாத்திரமாகச் சித்திரிக்கப்படுகிறார். "எனக்கும் தெரியும்" என்ற கதையில் சுகுணா, மூர்த்தி ஆகியோருக்கிடையே நடைபெறும் உரையாடல் பற்றிக்

கூறப்பட்டுள்ளது. சுகுணாவின் தந்தை 'சோமு' துணைமைப் பாத்திரமாக வருகிறார். 'ராட்சஸக் குழந்தை' கதையில் மூர்த்தியின் வாழ்வில் நிகழும் சம்பவங்கள், மாற்றங்கள் கூறப்படுகின்றன. இதில் அவரின் தந்தை பற்றி நினைவுகூர்கிறார். 'தட்சணை' என்ற கதையில் வைத்தியின் பள்ளி வாழ்க்கை கூறப்பட்டுள்ளது. இதில் அவரின் 'தந்தை' பற்றிக் கூறுகிறார். எனவே துணைமைப் பாத்திரமாகக் கொள்ளப்படுகிறார். "மனசு" என்ற கதையில் வரும் ரேணுவின் வாழ்வில் நடக்கும் நிகழ்வுகள் கூறப்படுகின்றன. ரேணு, தன் தோழியிடம் தன் தந்தையைப் பற்றிக் கூறுகிறாள். இதில் அவளின் தந்தை துணைமைப் பாத்திரன்ாகக் கொள்ளப்படுகிறார். "கருணையினால் தான்" என்ற கதையில் வரும் 'கேசவன்' கைது செய்யப்படுகிறான். காவலர் 'தேவா'விடம் தன் தந்தை பற்றிக் கூறுகிறான். எனவே, இதில் 'தந்தை' பாத்திரம், துணைமைப் பாத்திரமாகக் காண்பிக்கப்படுகிறது.

தந்தையின் பண்புகள்

"அப்பாவின் வேஷ்டி" சிறுகதைத் தொகுப்பில் தந்தையின் பண்புகளாக நாட்டுப்பற்று, சுமைதாங்கி, கண்டிப்பு, குழந்தைகளின் மீது பாசம் ஆகியவை கூறப்பட்டுள்ளன.

**நாட்டுப்பற்று**

ஆசிரியர் தம் தந்தையின் இயல்புகளை "சைக்கிள்" என்ற கதையில் கூறியுள்ளார். இக்கதையில் வரும் வைத்தியநாதனின் தந்தை சுதந்திரப் போராளி. ஆனால் வைத்தியின் மாமாவோ பிரெஞ்சுக்காரர்களின் கீழ் அவர்களுக்கு விசுவாசத்துடன் இருப்பவர். வைத்தியின் மாமா, வைத்தியின் அப்பாவைப் பற்றிக் கேலியாக,

"காந்தி சொன்னாருன்னு கோணித் துணியைக்
கட்டிக்கிட்டுத் திரிஞ்சா, வெள்ளைக்காரன்
பயந்துடுவானாக்கும்"

என்று கூறுகிறார். ஆசிரியர் முன்னுரையில் தன் தந்தையைப் பற்றிக் கூறும்போது, "கதர்சட்டை அணியத் தொடங்கினார்" என்று கூறுவதன் மூலமும், ஆசிரியரின் இயற்பெயரான 'வைத்தியநாதன்' என்ற பெயரில் சுருக்கம் 'வைத்தி' என்று சுட்டப்படுவதாலும் இக்கதையில் தன் தந்தை பற்றிக் கூறியுள்ளார் ஆசிரியர் என்பதைத் தெளிவாக அறியமுடிகிறது.

**சுமைதாங்கி**

தன் குடும்பத்திற்காகக் கஷ்டங்களைத் தாங்கிக்கொண்டு தன் சுகத்தைக் குடும்பத்திற்காகத் தியாகம் செய்து வாழும் அப்பாக்களை "நிகழ் உலகம்" கதை எடுத்துக் காட்டுகிறது. குடும்ப வறுமை காரணமாகச் சண்முகசுந்தரம் செய்த குற்றத்தை ஏற்று மூர்த்தி சிறை செல்கிறான். சிறையிலிருந்து திரும்பின பின்பு தன் மனைவியால் நிராகரிக்கப்பட்டு மீண்டும் சிறை செல்கிறான். மூர்த்தி, 'தான் சண்முகசுந்தரத்தால்

ஏமாற்றப்பட்டதைத் தன் மனைவியிடம் கூறுகிறான். “மறுபடி எப்ப போவீங்க?” என வினவுகிறாள் அவன் மனைவி. இப்பவே போறேன் என்று கிளம்பும்போது,

“போறதுன்னா பணத்தை வாங்கி

என் கையில் குடுத்துட்டு போங்க”

என்கிறாள். வறுமை உறவுகளைக்கூட அந்நியப்படுத்திவிடுகிறது என்பதை இந்த வரிகள் உணர்த்துகின்றன. ஆசாபாசங்களை மனதில் அடக்கி வைத்திருக்கும் தந்தையாக மூர்த்தி சித்திரிக்கப்படுகிறான். பெண்ணைப் பெற்ற ஒவ்வொரு தந்தையும் சுமைதாங்கிதான். தன் பெண்ணுக்கு நல்ல இடத்தில் திருமணம் முடியவேண்டுமே என்ற தவிப்பு, “எனக்கும் தெரியும்” என்ற கதையில் வரும் சோமு மூலம் புலப்படுகிறது. “எனக்கும் சுகுணாவைப் பிடிச்சிருக்கு சார். கல்யாணத்துக்கு நாள் பார்க்க வேண்டியதெல்லாம் இனி உங்க பொறுப்பு...” என்று மூர்த்தி கூறியதும்,

“அப்படியா ரொம்ப சந்தோஷம்.. சந்தோஷம்..”

“அவர் அவன் கையைப் பிடித்துக் கொண்டார்

அழுது விடுபவர் போல் இருந்தது”

தன் பெண்ணக்கு எந்த இடத்திலும் வரன் அமையாமல் இருந்தபோது, கடைசியாக வந்த வரன் திருமணத்திற்குச் சம்மதித்ததும் ஒரு தந்தைக்கு ஏற்படும் மனமகிழ்வை இக்கதை கூறுகிறது.

**கண்டிப்பு**

சில அப்பாக்கள் தன் பிள்ளைகள் ஒழுக்கம் தவறிவிடக் கூடாது என்பதற்காக மிகவும் கண்டிப்பாக நடந்து கொள்வார்கள். ‘அரி என்கிற நண்பன்’ கதையில் வரும் தந்தை தன் மகன், படிக்கும் பிள்ளைகளோடு நட்புக்கொள்வதையே விரும்புகிறார். எனவே, கண்டிப்புடன் நடந்து கொள்கிறார். சவரக்கடையில் வேலை செய்யும் பையனோடு தன் மகன் சுற்றுவதை அவர் விரும்பவில்லை.

“இன்னொரு வாட்டி அந்தப் பையனோடு

சுத்தறத நான் பார்த்தேன், உன்னைச்

செருப்பால அடிப்பேன்”

என்று கூறுகிறார். ‘வடு’ என்ற கதையில் வரும் செண்பக ராஜலெட்சுமி தன் தந்தை பற்றிக் கூறுகையில்,

“அப்பா ரொம்ப கண்டிப்பு. நான் படிச்சு உத்யோகம்

பார்க்கணும்னு உயிரை வைத்துக் கொண்டிருக்கிறார்”

என்பதன் மூலம் இக்கதையில் வரும் தந்தையின் இயல்பை அறியலாம்

**குழந்தைகளின் மீது பாசம்**

தன் மகளை மணம் முடித்துக்கொடுத்த இடத்தில் அவளின் மாமியார், அந்த 3 நாளுக்காக மாதாமாதம் பிறந்த வீட்டிற்கு அனுப்புவதை நினைத்து மனம் நோகும் தந்தையை ‘3 நாள்’ கதையில் சித்திரிக்கிறார் ஆசிரியர்.

"அப்பா பிளாட்பாரத்தில் நின்றுகொண்டு

திரும்பிப் புத்தகக் கடையைப் பார்த்துக்

கொண்டிருக்கிறார். அவர் புத்தகங்களைப்

பார்க்கவில்லை என்று அவளுக்குத் தெரியும்"

மனதிற்குள் வருத்தம் இருந்தாலும் வெளியில் காட்டிக்கொள்ளாமல் பொறுமையாக இருக்கும் தந்தையாக இக்கதையில் வரும் சுமதியின் தந்தை காட்டப்படுகிறார்.

மனதில் உள்ள கஷ்டங்களைத் தாய் வாய்விட்டுப் புலம்பிவிடுகிறாள். ஆனால் தந்தையோ மனதிற்குள்ளேயே வைத்துப் புழுங்குவார். 'ஓடிப்போனவள் திரும்பியபோது' என்ற கதையில் வரும் பரசுராமனின் மூத்த மகள் வத்சலா ஒருவருடன் ஓடிப்போய் விடுகிறாள். இரண்டு வருடங்கள் கழித்து அவன் அவளை விட்டுவிட்டுச் சென்றதனால் அவளின் வாழ்க்கை திசைமாறி விடுகிறது. அவள் திரும்ப வரும் சேதி கேட்கும்போது,

"வத்சலா வாராளா?" என்றவர், என் கைகளை

கெட்டியாகப் பிடித்துக் கொண்டார் அவர் உடம்பு

குலுங்குவதை என்னால் உணரமுடிந்தது

மகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை உள்ளுக்குள் இருந்தாலும் அதை அவர் வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. கடைசியில் மகளைப் பார்க்காமலேயே இறந்துவிடுகிறார். தந்தைக்கு மகனிடம் உள்ள பாசத்தை "மாறுதல்கள்" கதை கூறுகிறது. சிறுவனாக இருந்தபோது ஊரிலிருந்து வரும் தன் அப்பாவைக் கட்டிக்கொண்டு வரவேற்கும் கோபி, பதினைந்து வயதான பிறகு தன் தந்தையிடம் இயல்பாக நடந்து கொள்கிறான். அவனது தந்தை சிறுவயது இயல்புகளை அவனிடம் எதிர்பார்க்கிறார்.

"என்னைக் கட்டிக் கொள்ள மாட்டானா

என்று இருந்தது"

எனும் வரிகள் தந்தைக்கு மகனிடம் உள்ள எதிர்பார்ப்பை விளக்குகிறது. என்னதான் வளர்ந்தாலும் பிள்ளைகள் எப்போதுமே பெற்றோருக்குக் குழந்தைகள்தான் என்பதை இக்கதை உணர்த்துகிறது.

**பிறருக்கு உதவுதல்**

அவசரகதியில் இயங்கிக் கொண்டிருக்கும் சுயநலமான உலகத்தில் ஒரு சிலர் மட்டும் மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மையில் உள்ளனர். அந்த வகையில் "ஆண்பிள்ளை" என்ற கதையில் வரும் கிச்சானுக்கு தாய்–தந்தை கிடையாது. வைத்தியநாதனின் 'அப்பா' தான் படிக்க வைக்கிறார். அவரைப் பற்றிக் கூறுமிடத்தில், "அப்பாதான் அதுக்குச் சம்பளம் கட்டியதெல்லாம்" என்று கூறுகிறார். அநாதையான கிச்சானுக்கு வைத்தியின் தந்தை செய்த உதவியே வாழ்வில் உயர்த்துகிறது. பிற்காலத்தில் ஆதரவற்ற பெண்ணுக்கு உதவும்படி செய்கிறது.

**எதிர்மறை தந்தை பாத்திரம்**

பொறுப்பற்ற தந்தைக்கு உதாரணமாக “அப்பாவுக் கணக்கில் 35 ரூபாய்” என்ற கதையில் வரும் அப்பாவும், “சுமதிக்கு ஒரு கடிதம்” என்ற கதையில் வரும் பரசுராமும் சித்திரிக்கப்படுகிறார்கள். தன் மகளைக் கவுரவக் கொலை செய்யும் தந்தையாக “நேற்று மனிதர்கள்” என்ற கதையில் வரும் சுமதியின் தந்தையும், ஒழுக்கக்கேடான தந்தையாக “4வது வழி” என்ற கதையில் வரும் ராஜியின் தந்தையும் சித்திரிக்கப்படுகிறார்கள். தந்தை என்றாலே அன்பானவர், பொறுமையானவர், பொறுப்புகள் மிகுந்தவர் என்பதற்கு மத்தியில் ஒருசில புல்லுருவிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். “அப்பாவுக் கணக்கில் 35 ரூபாய்” என்கிற கதையில் வரும் அப்பாவு என்பவர் தன் குடும்பம் பசியால் வாடும்போது, தனக்குக் கிடைத்த நூறு ரூபாயில் இருபத்தி ஐந்தை மட்டும் வீட்டில் கொடுத்துவிட்டு மீதியைச் சாராயக் கடையில் செலவிடுகிறார். இதனை,

“கையில் என் தம்பி கொடுத்தனுப்பின
பணம் கொஞ்சம் இருக்கு அது
தீர்ற மட்டும் அந்த ஆளு அங்கதான் கிடக்கும்”

என்ற வரிகள் விளக்குகின்றன. தன் குழந்தைகள் குடும்ப வறுமையில் மெலிந்து கிடக்கக் கிடைத்த பணத்தை வீணாகச் செலவு செய்யும் அப்பாவாக ’அப்பாவு’ சித்திரிக்கப்படுகிறார். சில தந்தைகள் வீண் செலவு என்று பெண் குழந்தைகளைப் படிக்க விடுவதில்லை. இதனால் ’இடைநிற்றல்’ ஏற்படுகிறது. ’சுமதிக்கு ஒரு கடிதம்’ என்ற கதையில் வரும் பரசுராமன் தன் மகள் கஸ்தூரியைப் பணமில்லாத காரணத்தால் இடைநிறுத்தம் செய்கிறார். “பொட்டைக் குட்டிக்குப் படிப்பு என்னத்துக்கு சார்” என்கிறார். ஆனால் மூர்த்தி புத்தகங்களை வாங்கிக்கொடுத்து அவளைப் படிக்குமாறு அறிவுறுத்துகிறார். ஒழுக்கக்கேடான தந்தையினால் பிள்ளைகளின் வாழ்வு கேள்விக்குறியாகிறது. சரியான கல்வி கிடைப்பதில்லை. அதனால் அவர்களின் வாழ்வு திசைமாறுகிறது. ‘4வது வழி’ என்ற கதையில் வரும் மூர்த்தி லாட்ஜில் வேலை செய்யும் ’ராஜி’ என்ற பையனிடம் அவனின் அப்பாவைப் பற்றிக் கேட்கும்போது, “அது ஓடிப்போச்சு சார்” என்கிறான். இதனால் குடும்பச் சூழல் மாறுகிறது. லாட்ஜில் வேலை செய்யும் நிலை, வயதுக்கு மீறிய சில வேளைகளில் ஈடுபடும் நிலையும் அவன் வாழ்வில் ஏற்படுகிறது.

மகள் தகுதிக்கும் கீழானவனைக் காதலித்ததால், தன் கவுரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள அவளைக் கொலை செய்யும் கொடூரத் தந்தைகளும் இருக்கிறார்கள். “நேற்று மனிதர்கள்” கதையில் வரும் தந்தை, தன் மகள் சுமதி வீட்டு வேலையாள் குப்புசாமியைக் காதலித்தாள் என்பதற்காக இருவரையுமே கொலை செய்கிறார்.

“இரவு சுமதியைக் கொள்ளிடக் கரைக்கு அழைத்துக்
கொண்டுபோய், அண்ணன் அவள் கைகளைப்
பிடித்துக்கொள்ள அப்பன் அவள்மேல் பெட்ரோலை

ஊற்றியிருக்கிறான். அவள் கொளுத்தப்பட்டாள்.

உடம்பைக் கொள்ளிடம் கொண்டுவிட்டது"

என்ற வரிகள் இதனை விரித்துரைக்கின்றன.

**அப்பா பாத்திரத்தில் தன் வரலாற்றுக் கூறுகள்**

"சைக்கிள்" என்ற கதையில் ஆசிரியர் தாம் பாண்டிச்சேரியில் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தில் இருந்தபோது நடந்த நிகழ்வுகளைக் கூறியுள்ளார். ஆசிரியர் தன் வரலாறு கூறுவதாக இக்கதை அமைந்துள்ளது. இக்கதையில் தன் அப்பாவை "காந்திக்கட்சிக்காரனான என் அப்பா" என்று கூறியுள்ளார். முன்னுரையில் தன் அப்பா அரசியலில் ஈடுபட்டிருந்தார் என்று கூறுவதன் மூலமும் 'வைத்தி' என்று ஆசிரியரின் இயற்பெயர் வருவதனால் ஆசிரியரின் வாழ்க்கை நிகழ்வு என்பதை அறிய முடிகிறது. தன் தந்தை பற்றிக் கூறும்போது உதவும் மனப்பான்மை உடையவராகக் காட்டுகிறார். அவர் முன்னுரையில் கூறும்போது தந்தையின் குணங்களில் "அருள்" அதாவது "இறங்குதல்" என்பதைச் சுட்டுகிறார். இதனால் இக்கதையில் ஆசிரியரின் சொந்தத் தந்தை பற்றிக் கூறியுள்ளார் என்பதை அறியமுடிகிறது. 'அரி என்கிற நண்பன்' கதையில் ஆசிரியர் தன் சிறுவயது நிகழ்வுகளையும் 'அரி' என்கிற நண்பன் பற்றியும் கூறியுள்ளார். தன் தந்தை பற்றிக் கூறும்போது,

"சவரக் கடையில் வேலை செய்யும் பையனோடு

படிக்கிற பையனாகிய நான் சினேகிதம் வைத்துக்

கொள்வதை என் அப்பா விரும்பவில்லை"

என்று கூறுவதன் மூலம் ஆசிரியர் தன் சொந்தத் தந்தை பற்றிக் கூறியுள்ளார் என்பதை அறியலாம். "மாறுதல்கள்" கதையில் ஆசிரியர் தம் சொந்த வாழ்வின் நிகழ்வுகள் மற்றும் அவரது மகன்பற்றிக் கூறியுள்ளார். "நல்ல வளர்த்தி, என் அப்பா வாகு அவனுக்கு" என்று கூறுவதன் மூலம், முன்னுரையில் தன் தந்தை பற்றிக் கூறுகையில் 'நல்ல உயரம்' என்று கூறுவதிலிருந்து தன் தந்தை பற்றிக் கூறியுள்ளார் என்பதை அறியலாம். தன் மகன் கோபிக்குத் துணி எடுக்கும்போது, தன் தந்தை தனக்கு ஆடைத் தேர்வு செய்யும் விதத்தையும், அதை வளர்கிற பிள்ளையாயிற்றே என்று தாராளமாகத் தைக்கக்கொடுக்கும் விதத்தையும் பற்றிக் கூறியுள்ளார். 'ராட்சஸக் குழந்தை' என்ற கதையில் அந்தக்கால முடிதிருத்தும் போக்கு, சில இடங்களில் இருக்கும் நேர்த்தியையும், தற்பொழுது நாகரிகம் வளர்ந்துவிட்ட காலத்தில் முன்பதிவு செய்து முடிதிருத்தும் செய்ய வேண்டி இருக்கும் நிலைமை பற்றிக் கூறுகிறார். தன் அப்பா பற்றிக் கூறுகையில் "மாதத்தில் முதல் ஞாயிற்றுக்கிழமை அப்பாவைப் பொருத்தவரை முடியிறக்கும் கிழமை" என்று தன் சொந்தத் தந்தை பற்றிக் கூறுகிறார். 'தட்சணை' என்ற கதையில் ஆசிரியர் தம் பள்ளிப் பருவத்தில் நடந்த நிகழ்வுகளைக் கூறியுள்ளார். 'வைத்தி' என்ற பெயர் குறிப்பிடப்படுவதால் இது அவரின் சொந்த வாழ்க்கை நிகழ்வு என்பதை அறியலாம். 'அப்பாவின் வேஷ்டி' என்ற கதையில் அப்பா அவர் வைத்திருக்கும் பட்டு வேஷ்டியைப் பராமரிக்கும் விதத்தைப் பற்றிக் கூறியுள்ளார்.

முன்னுரையில், "அப்பா அவருடைய ஆடைகளைத் துவைத்து உலரவைத்து அணியும் பழக்கமுடையவர்" என்று கூறியுள்ளார். இதன் மூலம் இக்கதையில் தன் சொந்தத் தந்தையைப் பற்றிக் கூறியுள்ளார் என்பதை அறியமுடிகிறது.

**பிரபஞ்சனின் பார்வையில் தந்தை**

பிரபஞ்சன் தன் 'அப்பாவின் வேஷ்டி' என்ற சிறுகதைத் தொகுதியின் முன்னுரையில், அவரது அப்பா முதலில் கள்ளுக்கடை வைத்திருந்ததாகவும், பின்பு அரசியல் ஆர்வம் ஏற்பட்டுக் கதர்ச்சட்டை அணியத் தொடங்கினார் என்றும் கூறியிருக்கிறார். அவருடைய அப்பா தன்னுடைய ஆடைகளைத் தாமே துவைத்து உலரவைத்து அணியும் பழக்கமுடையவர் என்றும், "அந்தக் காலத்திலேயே நேற்று அணிந்த சட்டையை நான் இன்று அணிவதைப் பார்த்தால் அவருக்குத் தாங்காது" என்று கூறியுள்ளார். அவரின் தந்தை இறக்கும்வரை, தன் குடும்பச் செலவைப் பெரும்பாலும் அவரது தந்தையே கவனித்ததாகவும், ஒரு நாள்கூட தன் வேலை, சம்பளம் என்ன என்று அவர் கேட்டதே இல்லை என்றும் கூறியுள்ளார். தன் தந்தையின் குணங்களாக ஆசிரியர் கூறுமிடத்தில், "நேர்மை, நாணயம், ஒழுங்கு, அருள், மன்னிக்கும் சுபாவம்" இவற்றைத் தந்தையின் குணங்களாகக் கூறுகிறார்.

யாருக்கும் பாரமாய் இருக்க நினைக்காதவர் ஆசிரியரின் தந்தை என்பதை, "அவர் அலமாரியில், அவருடைய கடைசிப் பயணத்துக்கான செலவை, கணக்கிலிட்டுப் பொட்டலம் கட்டி வைத்து விட்டுச் சென்றார்" என்று முன்னுரையில் கூறப்பட்ட வரிகள் மூலம் அறியலாம். தனது தந்தையின் தோற்றம் பற்றிக் கூறுமிடத்தில், "என் சிறுவயது ஞாபகத்தில் அப்பா, எனக்குக் கதாநாயகனாகத்தான் இருந்தார். ரஷ்யாக்காரன் மாதிரி நிறம், நல்ல உயரம், குஸ்தி, கர்லா விளையாட்டு காரணமாகத் தெளிந்த உடம்பு, பட்டுச்சட்டை, பட்டு வேஷ்டி, கட் ஷூ, அமெரிக்கன் கிராப் என்பதாக அவர் இருந்தார்" எனத் தந்தையின் தோற்றம், இயல்புகள் பற்றி முன்னுரையில் கூறியுள்ளார்.

**தந்தையின் தோற்றம்**

ஆசிரியர் தந்தையின் தோற்றம் பற்றிக் கூறுகையில், "மாறுதல்கள்" என்ற கதையில் பட்டணத்திலிருந்து தன் ஊருக்கு வரும் கோபியின் தந்தை 'தற்போது கோபி எப்படி இருப்பான்?' என்று நினைவு கூறுகையில், "என் அப்பா வாகு அவனுக்கு" என்று கூறுவதன் மூலம் ஆசிரியர் முன்னுரையில் தன் தந்தை பற்றிக் கூறிய நல்ல உயரம் என்பதோடு பொருந்துகிறது. இதன் மூலம் ஆசிரியரின் தந்தை உயரமானவர் என்பதை அறியலாம். "ஓடிப்போனவள் திரும்பியபோது" என்ற கதையில் வரும் பரசுராமனைப் பற்றி மூர்த்தி கூறும்போது, "சராசரிக்கும் கொஞ்சம் குள்ளம் முழுவழுக்கை, மைதானத்தில் புல் முளைத்ததுபோல ஆங்காங்கே நரைமுடிகள் லாட்ஜ் சிங்கிள் ரூம்களில் வைக்கப்படும் மண் கூஜா மாதிரியான தொந்தி" என்று பரசுராமனின் தோற்றம் பற்றிக் கூறுகிறார். "எனக்கு தெரியும்" என்ற கதையில் வரும் சுகுணாவின் தந்தை பற்றி மூர்த்தி கூறும்போது "பால்ஐஸ் மாதிரி வெளுத்த தலையோடு உள்ளே வந்தார்" என்று கூறுகிறார். "அப்பாவின் வேஷ்டி" என்கிற கதையில் தன் சொந்தத் தந்தை பற்றிக் கூறுகிறார். "அப்பாவின் உடம்பு சிவந்துபோய் விடும். ஏற்கனவே அவர்

சிவப்பு. குளித்த பின் உடம்பு பழுத்து விட்டது மாதிரி இருக்கும்". அவர் முன்னுரையில் ரஷ்யாக்காரன் மாதிரி நிறம்" என்று கூறுவதிலிருந்து இக்கதையில் தன் தந்தையைப் பற்றிக் கூறியுள்ளார் என்பதை அறியலாம்.

**முடிவுரை**

"அப்பாவின் வேஷ்டி" கதைத் தொகுதியில் 'வைத்தி' என்ற ஆசிரியரின் இயற்பெயர் வருவதனால் அவரின் சொந்த வாழ்வின் நிகழ்வுகள் கதையாக்கப்பட்டுள்ளன என்று அறியமுடிகிறது. சில கதைகளில் ஒருசில இடங்களில் தந்தை பற்றிக் கூறும்போது முன்னுரையில் கூறப்பட்ட ஆசிரியரின் தந்தையின் இயல்புகளோடு பொருந்துவதால் அவரின் சொந்தத் தந்தை பற்றிய செய்திகள் என்பதை அறியமுடிகிறது. சில கதைகளில் தான் வாழ்வில் சந்தித்த நபர்களின் கதைகளைக் கூறியுள்ளார். சில கதைகளில் தந்தையை எதிர்மறைப் பாத்திரமாகக் காட்டி இருந்தாலும், பெரும்பாலான கதைகளில் நல்ல இயல்புகளை உடைய அப்பாக்களைப் பற்றியே கூறியுள்ளார். தந்தையைத் தம் கதைகளில் நாட்டுப்பற்றுடையவராக, பிறருக்கு உதவுபவராக, குழந்தைகளில் மீது பாசம் உடையவராக சுமைதாங்கியாகச் சித்திரித்துள்ளார். தினம் தினம் ஒரு யுத்தம் நடத்தி ஒவ்வொரு நாளையும் வெற்றி கொள்கிற நிஜவாழ்வின் கதாநாயகர்களான 'அப்பாக்கள்' போற்றுதலுக்குரியவர்களே என்பதை இக்கட்டுரை மூலம் அறியமுடிகிறது.

**பார்வை நூல்கள்**

1. அறிஞர் ச.வே.சுப்பிரமணியம், சங்க இலக்கியம் எட்டுத்தொகை (தொகுதி –3) (அகநானூறு, புறநானூறு), மாணிவாசகர் பதிப்பகம், சென்னை. 2010.
2. திண்ணப்பன்,சுப., தமிழ் இலக்கியத்தில் தந்தை (கட்டுரை), சிம் பல்கலைக்கழகம், மதியுரைஞர், சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் சங்கம்.
3. பிரபஞ்சன், அப்பாவின் வேஷ்டி, நற்றிணை பதிப்பகம் (பி) லிட், சென்னை 2014.
4. இராசா, கி., தொல்காப்பியம் (பொருளதிகாரம் பகுதி 1), பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2007.